**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C.No.72/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 1 | | Examined as : PW 1 | |
| Name | : இராஜராஜேஸ்வரி | Defence | : |
| Husband Name | : ஜெயக்குமார். | Court | : |
| Village | : கச்சேரி ரோடு, மயிலாடுதுறை. | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 42 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day. 06.11.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை:–

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ஸ்ரீலெட்சுமிவிலாஸ் பெயரில் ஹார்டுவேர் கடை வைத்து நடத்தி வருகிறேன். எனது கணவர் கடந்த 2020 ஆம் வருடம் இறந்துவிட்டார். கடந்த 04.11.2021 ஆம் தேதி மதியம் 02.00 மணியளவில் எனது வீட்டு வாசலில் தீபாவளி தினத்தன்று எனது மகளும், அண்ணன் குழந்தைகளும் விளையாடிக் கொண்டிருந்தனர். எனது வீட்டு வாசலில் உள்ள தண்ணீர்பந்தல் கொட்டகையில் செந்தில்குமார் மற்றும் ஸ்ரீதர் இருவரும் அமர்ந்து கொண்டு வெளியில் விளையாடிக்கொண்டிருந்த எனது குழந்தைகளிடம் இராஜஸ்வரி குச்சிகாரியை வெளியே வரச்சொல்லு என்று எனது குழந்தைகளிடம் கூறினார்கள். மேலும் எனது குழந்தைகளிடம் மேலும் ஆபாசமான வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருந்தபோது சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்தேன். எதிரிகளிடம் ஏன் இவ்வாறு திட்டுகிறீர்கள், இங்கிருந்து செல்லுமாறு கூறினேன். எதிரி ஸ்ரீதர் நாங்கள் செல்ல முடியாது என்றும், குச்சிகாரி தேவடியா என்று தகாத வார்த்தைகளால் திட்டினார். எதிரி செந்தில் தான் கட்டியிருந்த கைலியை தூக்கிக்காட்டி ஆபாசமாக காட்டி தகாத வார்த்தைகளில் குச்சிகாரி, தேவடியா மகளே என்று திட்டினார்.

அந்த சமயம் எனது அண்ணனும், எதிரிகளை அங்கிருந்து செல்லுமாறு கூறினார். எனது வீட்டிற்கு எதிரே 50 அடி துூரத்தில் உள்ள பொறையான் கோவிலில் நின்றுகொண்டு அங்கிருந்த சூலத்தை பிடுங்கி இந்த ஊரில் இனிமேல் என்னை

இருக்க கூடாது என்றும், மீறி இருந்தால் என்னை கொலை செய்து விடுவதாகவும் மிரட்டினார். எதிரி செந்திலின் உறவுக்காரர் சோமு என்பவர் அந்த இடத்திலிருந்து எதிரிகளை அழைத்துச்சென்றுவிட்டார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான், **அந்த புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1வது எதிரி எனது கணவரின் அத்தை மகன் என்றால் சரிதான். நான் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் 13.08.2020 அன்று தர்ணா போராட்டம் செய்தேன் என்றால் சரிதான். அந்த சமயம் கொராணா காலம் என்றால் சரிதான். அந்த போராட்டத்தில் என்னையும் சேர்ந்து 8 பேரை கைது செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி போராட்டம் குறித்து மயிலாடுதுறை காவல் நிலையத்தில் குற்ற எண் 1231/2020 என பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை மயிலாடுதுறை காவல் நிலையத்தில் எனக்கு எதிராக பதிவுசெய்யப்பட்டதுதான். **அந்த முதல் தகவல் அறிக்கை எதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (அரசு தரப்பில் இந்த வழக்கிற்கும் மேற்படி முதல் தகவல் அறிக்கைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என ஆட்சேபனை செய்யப்பட்டது). இந்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்னர் எனது கணவர் பூச்சி மருந்து குடித்து இறந்தது சம்பந்தமாக நான் செம்பனார் கோவில் காவல் நிலையத்தில புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

எனது கணவர் இறப்பிற்கு நான்தான் காரணம் எனக்கூறி எனது மாமியார் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு செய்து அந்த மனுப்படி என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். எனது பெயரிலும். என்னை சேர்ந்தவர்கள் பேரிலும் 6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி சம்பவ சமயத்தில் மயிலாடுதுறையில் குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். எதிரிகள் எனது மாமியாரின் உறவினர்கள் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் மனுவில் எதிரி என்ன வார்த்தைகளைக்கூறி திட்டினார்கள் என வார்ததைகளை குறிப்பிட்டு கூறாமல் கொச்சை வார்த்தைகளால் திட்டியதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த தினம் மழைக்காலம் என்றால் சரிதான். மழைக்காலத்தில் தண்ணீர் பந்தல் கொட்டகை போடமாட்டார்கள் என்றால் சரியல்ல. கோடைகாலத்தில் தான் தண்ணீர் பந்தல் கொட்டகை போடுவார்கள் என்றாலும் நான்

இந்த வழக்கிற்காக சம்பவ தினத்தன்று தண்ணீர் பந்தல் கொட்டகை இருந்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

எனது வீட்டில் இருந்த சி.சி.டி.வி பதிவையும், எனது செல்போனில் எடுத்த வீடியோவையும் நான் காவல் துறையிடம் நான் ஒப்படைத்தேனா என்றால் நான் காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேன். அவர் வழக்கு விசாரணையின்போது பெற்றுக்கொள்வதாக கூறினார். எனது செல்போனில் உள்ள வீடியோவையும் சிசிடிவி பதிவையும் ஆய்வாளர் பார்த்தாரா என்றால் பார்த்தார். நான் சொல்வதுபோல் மேற்படி வீடியோவும், சிசிடிவி பதிவும் இல்லாததால் தான் அதனை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை எடுக்கவில்லை என்றால் நான் போராட்டம் செய்வேன் என பயந்து போலீசார் நான் கொடுத்த புகாரைப்பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

எதிரி என்னை மிரட்ட பயன்படுத்திய ஆயுதத்தை நான் போலீசாரிடம் காட்டினேனா என்றால் காட்டினேன். அதனை காவல் துறையினர் கைப்பற்றினார்களா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எதிரிகள் எனது மாமியாரின் உறவினர்கள் என்பதால் அவர்கள் மீது பொய்யாக வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும், எனது மாமியாருக்கும் பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு காவல் நிலையம், நீதிமன்றம் ஆகியவை நன்கு பழக்கப்பட்டவை என்பதால் நான் எதிரிகள் மீது பொய்யான வழக்கினை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எனது கணவர் இறப்பதற்கு முன்பு எழுதி வைத்த டெத் நோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அது குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மேற்படி டெத் நோட்டை காவல் ஆய்வாளரிடம் காண்பித்தேனா என்றால் இல்லை. அதில் போலீசார் பெயரும் எழுதப்பட்டிருந்ததால் நான் மயிலாடுதுறை R.D.O விடம் காண்பித்தேன்.

2020 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 1231/2020 ல் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எதிரிகள் தான் இந்த வழக்கின் சாட்சிகளாக உள்ளார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C.No.72/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 2 | | Examined as : PW 2 | |
| Name | : ஜமுனாராணி | Defence | : |
| Husband Name | : ராஜசேகர். | Court | : |
| Village | : காப்பனாமங்களம், திருவாரூர். | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 67 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day. 06.11.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை:–

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தற்போது எனது மகளுடன் மணக்குடி, மயிலாடுதுறை முகவரியில் கடந்த 4 வருடங்களாக வசித்து வருகிறேன். கடந்த 04.11.2021 ஆம் தேதி மதியம் 2.00 மணியளவில் நான் மணக்குடியில் உள்ள எனது மகளின் வீட்டில் இருந்தபோது வாசலில் எனது மகன் மற்றும் மகளின் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது வீட்டு வாசலில் கோடைக்கால தண்ணீர் கொட்டகை போடப்பட்டிருந்தது. அதில் எதிரிகள் செந்தில்குமார் மற்றும் ஸ்ரீதர் அமர்ந்துகொண்டு மிகவும் தரக்குறைவாக எனது மகள் இராஜராஜேஸ்வரியை திட்டிக்கொண்டிருந்தார்கள். நானும், எனது மகளும் சத்தம் கேட்டு வீட்டிற்கு வெளியே வந்து பார்த்தபோது எதிரிகள் இருவரும் எனது மகளை குச்சிகாரி, தேவடியா என்று தரக்குறைவாக திட்டினார்கள். எதிரி செந்தில் கைலியை தூக்கி காட்டி ஆபாசமாக திட்டினார். எதிரி ஸ்ரீதர் இங்கிருந்து செல்ல முடியாது என்று திட்டினார். அங்கிருந்தவர்கள் எதிரிகளை அந்த இடத்திலிருந்து அழைத்துச்சென்றனர்.

அப்போது எங்கள் வீட்டிற்கு எதிர் பக்கத்தில் உள்ள் பொறையான் கோவிலில் எதிரிகள் நின்றுகொண்டு அந்த கோவிலில் உள்ள சூலத்தை பிடுங்கிக்கொண்டு என் மகளை பார்த்தை உன்னை வாழ விடமாட்டேன் என்று மிரட்டினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

சம்பவ சமயத்தில் தெருவில் 6, 7 நபர்கள் தான் நின்றிருந்தார்கள் என்றாலும், எங்களது வீட்டினுல் யாரும் இல்லை என்றாலும் சரிதான். மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண் 1231/2020 ல் நான் 2 வது எதிரி என்றால் சரிதான். இந்த வழக்கின் 3 முதல் 7 வரையிலான பட்டியல் சாட்சிகள் மேற்படி குற்ற எண்ணில் எதிரிகள் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் தெருவில் நின்றவர்கள் எவரும் இந்த வழக்கின் சாட்சிகளாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். எனது மகளுக்கும், அவரது மாமியார் குடும்பத்திற்கும் இடையே உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். நானும், எனது மகளும் மணக்குடியில் வசிக்கவில்லை என்றால் சரிதான். மயிலாடுதுறையில் தான் வசித்து வருகிறோம்.

எனது மகள் மணக்குடியில் வசித்து வருவதாக புகாரில் குறிப்பிட்டு இருந்தால் சரிதான். தற்போது எனது மகள் மணக்குடியில் வசித்து வருகிறார். எனது மகள் மயிலாடுதுறை, கச்சேரி ரோட்டில் தான் வசித்து வருகிறார் என்றாலும், குற்ற எண் 1231/2020 லிலும், மயிலாடுதுறை முகவரியில் தான் வசித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளார் என்றாலும், புகார் கொடுப்பதற்காக மட்டும் மணக்குடியில் வசித்து வருவதாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு எவ்வளவு நாட்களான எனது மகளுடன் இருந்தேன் என்றால் எனது மருமகன் இறந்ததிலிருந்து எனது மகளுடன் வசித்து வருகிறேன். நான் போலீசார் விசாரணையில் சம்பவ தினத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் தான் எனது மகள் வீட்டிற்கு வந்தேன் என்று கூறியிருந்தேன் என்றால் அது தவறு. நான் திருவாரூர் மாவட்டம், காப்பனாமங்களத்தில் குடியிருந்து வருகிறேன் என்றாலும், இந்த வழக்கிற்காக எனது மகளுடன் வசித்து வருவதாக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் எனது மகள் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எனது மகள் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C.No.72/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW3 | | Examined as : PW3 | |
| Name | : சுதாகர் | Defence | : |
| Father Name | : ராஜசேகர் | Court | : |
| Village | : காப்பனாமங்களம்,<br>திருவாரூர். | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 46 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day. **06.11.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை:–</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 04.11.2021 ஆம் தேதி நான் எனது குடும்பத்துடன் மணக்குடியில் உள்ள எனது தங்கை வீட்டிற்கு தீபாவளிக்காக வந்திருந்தோம். அன்றைய தினம் மதியம் 02.00 மணியளவில் எனது குழந்தைகளும், எனது தங்கையின் குழந்தைகளும் வீட்டு வாசலில் வெடிவெடித்துக் கொண்டிருந்தார்கள். எனது தங்கை வீட்டருகே கோடைக்கால தண்ணீர் பந்தலுக்காக போடப்பட்ட கொட்டகையில் எதிரிகள் இருவரும் அமர்ந்துகொண்டு குழந்தைகளிடம் எதிரி செந்தில் எனது தங்கையைப்பற்றி தரக்குறைவாகவும், அசிங்கமாவும் கூறி அழைத்து வருமாறு கூறினார். எனது அம்மாவும், தங்கையும் வெளியே வந்து பார்த்தபோது எதிரிகள் தனது உடலில் துணிகள் இல்லாமல் கைலியை தூக்கி காண்பித்து ஆபாசமாக பேசினார்கள். எனது மகன் என்னிடம் வந்து தகவல் கூறி நான் வெளியே வந்து பார்த்தபோது எதிரிகளிடம் ஏன் இவ்வாறு தகராறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு அவர்கள் மேலும் என்னிடம் எனது தங்கையைப்பற்றி தரக்குறைவாக பேசினார்கள்.

வீட்டிற்கு எதிரே உள்ள கோவிலில் நின்று கொண்டு அங்கிருந்த சூலத்தை பிடுங்கி எனது தங்கையை நோக்கி இந்த ஊரில் உன்னை வாழ விடமாட்டேன், உன்னை ஊரிலிருந்து விரட்டிவிடுவேன் என்று எதிரி செந்தில் மிரட்டினார். எதிரியின் இச்செயலுக்காக நானும், எனது தங்கை மற்றும் எனது

அம்மாவுடன் செம்பனார்கோவில் காவல் நிலையத்திற்கு புகார் அளிக்க சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

நான் வழக்கு சம்பவத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பு வெளிநாட்டிலிருந்து வந்தேன். எனது தங்கைக்கு ஆதரவாக நானும் மயிலாடுதுறை காவல் நிலையத்திற்கு முன்பு தர்ணா போராட்டம் நடத்தி அதில் கைது செய்யப்பட்டேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கு சம்பவத்திற்கு பிறகு எனது குடும்பத்துடன் மயிலாடுதுறையில் வசித்து வருகிறேன். நான் எனது தங்கை இராஜராஜேஸ்வரி கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் 04.11.2021 அன்று செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அதன் பிறகு போலீசார் என்னை 10 நாட்களுக்கு பிறகு விசாரித்தார்கள். தற்போது நான் காப்பானமங்களத்தில் வசித்து வருகிறேன். நான் வழக்கு சம்பவத்தின்போது மணக்குடியில் இல்லை என்றாலும், மணக்குடியில் இருந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் எனது தங்கை மயிலாடுதுறையில் வசித்தார்களா என்றால் சரியல்ல மணக்குடியில் இருந்தார்கள். இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும். புகார்தாரர் எனது தங்கை என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**<u>C.C.No.72/2023</u>**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | LW5 | Examined as : | PW4 |
| Name | : வெங்கட்ராஜூலு | Defence | : |
| Father Name | : இராஜேந்திரன் | Court | : |
| Village | : கழுக்காணிமுட்டம், மயிலாடுதுறை. | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 42 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day. **06.11.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை:–</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து எலக்ரானிக் கடை வைத்து நடத்தி வருகிறேன். அசா1 இராஜராஜேஸ்வரி மணக்குடியில் துணிக்கடை வைத்து நடத்தி வருகிறார். அந்த கடை மணக்குடியில் உள்ள அவரது வீட்டு காம்பவுண்ட்டு உள்ளேயே கடையும் உள்ளது. அசா1 இராஜராஜேஸ்வரியின் கணவர் எனது நண்பர் ஆவார். தீபாவளி சீசனுக்காக இராஜராஜேஸ்வரியின் கடையில் மேற்பார்வை பார்த்து வந்தேன். கடந்த 04.11.2021 அன்று மதியம் 02.00 மணியளவில் அசா1ன் குழந்தைகள் வீட்டு காம்பவுண்ட்டுக்குள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது பெரிய நபர்கள் ஆபாசமான வார்த்தைகளால் பேசியதாக சத்தம் கேட்டு கடையிலிருந்து வெளியே வந்து பார்த்தபோது வீட்டிற்கு வெளியே வலதுபுறம் கொட்டகை ஒன்று காம்பவுண்ட்டை ஒட்டினார்போல் உள்ளது. அந்த கொட்டகையில் அமர்ந்து கொண்டு எதிரிகள் இருவரும் தகாத வார்த்தைகளில் திட்டிக்கொண்டிருந்தார்கள். அப்போது அசா1ம் அவரது அம்மாவும் வெளியே வந்து பார்த்தார்கள்.

அப்போது எதிரிகளில் செந்தில் என்பவர் தனது உடலில் துணி இல்லாமல் கைலியை துாக்கி காட்டி அசா1 ஐ ஆபாசமாக திட்டினார். அசா1 எனது கொட்டகையை விட்டு வெளியே போங்கள் என்று கூறியதற்கு எதிரி ஸ்ரீதர் நீ சொன்னால் நான் போக வேண்டுமா என்று தகாத வார்த்தைகள் கூறி சத்தம் போட்டார். தகராறு நடந்துகொண்டு இருந்தபோதே அசா1ன் அண்ணன் வெளியே வந்து எதிரிகளிடம் தகராறு பற்றி

கேட்டபோது மேலும் எதிரிகள் திட்டினார்கள். அசா1ன் வீட்டிற்கு எதிரே உள்ள பொறையான் கோவிலில் எதிரிகள் நின்றுகொண்டு எதிரிகள் அசா1 திட்டிக்கொண்டு இருந்தபோது சோமு என்கிற சோமசுந்தரம் எதிரிகளிடம் சமாதானமாக பேசி அழைத்துச்செல்ல முற்பட்டபோது கோவிலில் உள்ள சூலத்தை பிடுங்கி அசா1 ஐ பார்த்த இந்த ஊரைவிட்டு செல்லுமாறும், இல்லை என்றால் கொலை செய்து விடுவேன் என்று மிரட்டி குத்துவதற்காக வந்தார். அப்போது அங்கிருந்தவர்கள் சூலத்தை பிடுங்கி அவரை சமாதானம் படுத்தி அனுப்பி வைத்தார்கள். நடந்த சம்பவங்களை அசா1ன் இளையமகள் இராஜலெட்சுமி அவரது அம்மாவின் கைப்பேசியில் படம் பிடித்துள்ளார். கைப்பேசியில் உள்ள வீடியோவையும் சி.சி.டி.வியில் உள்ள பதிவுகளையும் போலீசாரிடம் காண்பித்தோம். பின்னர் அசா1 புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றபோது நானும் உடன் சென்றேன்.போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண் 1231/2020 வழக்கில் நானும் ஒரு எதிரி என்றால் சரிதான். சம்பவதினத்தன்று தீபாவளி என்பவதால் அன்று கடை மூடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. நான் கடை திறந்துதான் வியாபாரம் செய்து வந்தேன். அசா1ன் அண்ணன் சம்பவத்தின்போது சத்தம் கேட்டு வெளியே வந்தார் என்று போலீசாரின் எனது விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அசா1ன் மீது உள்ள குற்றவியல் வழக்குகளில் இரண்டு வழக்கில் மட்டும் நான் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளேன். அசா1 கொடுத்த புகாருக்கு ஆதரவாக நான் தீபாவளி அன்று கழுக்காணிமுட்டத்திலிருந்து வந்த கடையை திறந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை 11.11.2021 அன்று விசாரணை செய்தார்கள். 04.11.2021 அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றபோது போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், நான் வழக்கு சம்பவத்தை பார்த்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C.No.72/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | LW6 | Examined as : PW5 | |
| Name | : சுந்தரேஷ் | Defence | : |
| Father Name | : ராஜாமணி | Court | : |
| Village | : மணக்குடி. | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 43 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day. 06.11.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை:–</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 11.11.2021 ஆம் தேதி பகல் 12.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது செம்பனார்கோவில் போலீசார் என்னை தொலைபேசியில் என்னை காவல் நிலையம் அழைத்து எதிரிகளுக்கும், அசா1 இராஜராஜேஸ்வரிக்கும் இடையே நடந்த தகராறு பற்றி விசாரித்து என்னிடம் வெற்றுப்பேப்பரில் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் முதலாவது கையொப்பம் என்னுடையததான், **அந்த கையொப்பம் மட்டும் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பு சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊரைச்சேர்ந்தவர்கள். அவர்களோடு நான் நட்பு முறையில் பழகி வருகிறேன் என்றால் சரிதான். எதிரிகள் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதாலும், எதிரிகளுடன் பழகி வருவதாலும், கையெழுத்தினை மட்டும் ஒத்துக்கொண்டு சங்கதிகளை மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

அசா1 இராஜராஜேஸ்வரி எனக்கு நன்கு பழக்கப்பட்டவர் என்றால் சரிதான். எங்கள் வீட்டுக்கு எதிரே உள்ள ஜவுளிக்கடை அசா1 ற்கு சொந்தமான கடையாகும். அந்த கடை தீபாவளி தினமான 04.11.2021 அன்று திறக்கப்பட்டிருந்ததா என்றால் இல்லை. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் எழுதப்பட்டிருந்ததா என்றால் இல்லை. போலீசார் மேற்படி கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து பெற்றார்கள் என்றால் சரிதான். போலீசார் கையெழுத்து போடச்சொன்னதால் நான் பயந்து கொண்டு கையொப்பம் செய்து கொடுத்தேனா என்றால் இல்லை. அசா1ன் வீட்டிற்கு எதிர் வீட்டில் வசிப்பதால் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**